ORIGINAL ARTICLE

# கற்றல் கற்பித்தலில் 'எட்மோடோ'
# [KAṞṞAL KAṞPITTALIL EDMODO]

## EDMODO-BASED LEARNING

**Ilangkumaran Sivanathan**

[1] Faculty of Languages and Communication, Sultan Idris Educational Universtiy, Malaysia.
Email: ilangkumaran@fbk.upsi.edu.my

DOI: https://doi.org/10.33306/mjssh/239

**Abstract**

The dimension of education has changed as a result of technology's rapid development. The emergence of social networking tool has enabled people to connect and collaborate throughout of social networking tool enabled people to connect and collaborate throughout the computer. An educational network, Edmodo aims to provide teachers with tools to help them communicate and connect with their students and parents. Teachers can share content, texts, videos, homework, and assignments with their students using Edmond's app or website. We used an explanatory approach to understand Edmodo in detail. The results show that using Edmodo-based learning is the best teaching and learning tool for teachers and students. Edmodo-based e-learning in the blended learning process successfully facilitates student participation in online discussions and assignments and can increase students' interest and motivation to improve their learning outcomes. The results of this paper suggest that learning activities need to be developed on the basis of sociocultural theory and a systems approach to communicative learning so that they can improve interaction and communication through the use of Edmodo-based e-learning in a blended learning process applied to the student learning process in education.

**Key words:** Edmodo, Tamil Language, Technology, Social networking, Blended Learning

**ஆய்வுச் சாரம்**

தொழில்நுட்பத்தின் அபரிவிதமான வளர்ச்சியின் விளைவாக கல்வியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. சமூக ஊடகங்களின் வளர்ச்சி மக்களையும் ஊடகத்தையும் இணைக்க உதவுகிறது. எட்மோடோ என்ற சமூக கல்வியியல் வலைத்தளமும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களையும் இணைக்க உதவுகிறது. எட்மோடோ வலைத்தளம் அல்லது செயலிகள் மூலம் ஆசிரியர்கள் தங்களின் கல்வி சார்ந்த உள்ளடக்கத் தரவுகளான பாடநூற்கருவிகள், படக்காட்சிகள், இடுப்பணிகளை தங்களது மாணவர்களுக்கு வழங்க உதவுகிறது. இக்கட்டுரை எட்மோடோ பற்றிய விளக்கங்களைக் குறித்து விவரிக்க விளக்க முறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சிறந்த கற்பித்தல்

கற்றல் கருவியாக எட்மோடோ பயன்படுகிறது என்பதே இக்கட்டுரையின் முடிவு. இணை கற்றல் செயல்பாட்டில் எட்மோடோ அடிப்படையிலான மின்-கற்றல், இணைய விவாதங்கள் மற்றும் இடுபணிகளில் மாணவர் பங்கேற்பை வெற்றிகரமாக எளிதாக்குகிறது. மேலும் , மாணவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்தவும் மாணவர்களுக்கு ஆர்வத்தையும் ஊக்கத்தையும் அதிகரிக்க உதவுகிறது.

**கருச்சொற்கள்:** எட்மோடோ, தமிழ் மொழி, தொழில்நுட்பம், சமூக வலைப்பின்னல், கலப்பு கற்றல்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 26th November 2022, revised 18th December 2022, accepted 7th January 2023

## முன்னுரை

இன்றைய உலகமயத் தாக்கத்தில் கல்விமுறை பெரும் மாற்றத்தைச் சந்தித்து வருகிறது. பல்லூடகத் தொழில்நுட்ப வளர்ச்சி ஒருவர் கற்கும் முறை, தகவல்களைச் சேகரிக்கும்முறை, தகவல்களைச் செயற்படுத்தும் முறை ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒலிஒளி ஊடகம், காணொளி படைப்பு ஆகியவற்றின் துணைகொண்டு கற்றல் கற்பித்தலில் நடைபெறும் அக்கற்றல் கற்பித்தல் சிறந்த விளைப்பயனைப் ஏற்படுத்துகிறது. எட்மோடோ தொழில்நுட்பத்தைக் கொண்டு தமிழ் இலக்கியப் படைப்புகளை கற்பிக்கும் போது அது சிறந்த கற்பித்தலுக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இக்கட்டுரையின் மூலம் எட்மோடோவின் செயல்பாடுகளை அறிந்துகொள்ள இயலும் (Jarc, 2010)[1].

பள்ளிக் காலத்திற்குப் பின்னரும் தமக்கான அறிவையும் திறன்களையும் மாணவர்கள் சுயமாகக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றன. இதனால், வாழ்நாள் முழுவதும் அறிவையும், திறன்களையும் புதுப்பித்துச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான், புதிய அறிவியல் தொழில்நுட்ப சமுதாயத்தில் இணங்கி வாழ்வது சாத்தியமாகும் (Selwyn, 2009)[2]. எனவே, பள்ளிக் காலத்துக் கல்வியானது மாணவர்கள் விலகிய பின்னரும் புதிய அறிவையும் திறன்களையும் கற்றுக் கொள்வதை இலகுபடுத்தும் முறையில் சுயமாகக் கற்கும் வழிமுறைகளைக் கற்றுக் கொடுப்பதாக இருத்தல் வேண்டும் (Thannimalai, 2020)[3]. சுய அறிவு, சுயத் தேடல், சுயக் கற்றல் போன்ற அம்சங்களை வலியுறுத்தும் கல்விச் செயற்பாடுகள் தான் விரிவு பெற வேண்டும் (Pal Thamburaj, 2020)[4].

ஆகவே, மாணவர்களது சுயக் கற்றல், சுய அறிவு, சுயத்தேடல் போன்றவைகளுக்கேற்ப கற்றல் கற்பித்தல் செயல்முறை அமையவேண்டும் (Kandappan Balasubramanian, 2014)[5]. இதற்கான புதிய வழிமுறைகள் பற்றிய கற்றலிலும் தேடலிலும் ஆசிரியர்கள் முனைப்பாக இருக்க வேண்டும் (Ponniah, 2022)[6]. அந்த வகையில், “எட்மொடொ” எனும் கல்வி அறிவுக்

கள சமூக வலைத்தளம் கற்றல் கற்பித்தலை ஒரு புதிய பரிணாமத்திற்கு எடுத்துச் செல்கிறது. பல வசதிகளை உள்ளடக்கிய 'எட்மொடொ' மாணவர்களின் சுயக் கற்றலை உருவாக்குவதோடு மொழித்திறன்களை மேம்படுத்தவும் அதிகம் துணைபுரிகின்றது.

**'எட்மொடொ' வின் முக்கிய அம்சங்களும் பயன்களும்**

1. உரை உள்ளீடு
   மாணவர்களின் எழுத்தாற்றலை மேம்படுத்த வாய்ப்பளிக்கும் வகையில் தமிழ்மொழியில் தட்டச்சு செய்து பதிவேற்றம் செய்வதற்கான வசதிகள் தளத்தில் உள்ளன.
2. கருத்துத்தெரிவிப்பு
   கற்றலுக்கான மதிப்பீட்டை ஊக்குவிக்கும் வகையில் இந்த வசதி அமைந்துள்ளது. ஆசிரியர் - மாணவர் இருவருமே கருத்துப் பகிர்வுகளை மேற்கொள்வதற்கும் கருத்துரைப்பதற்கும் 'எட்மொடொ' வழிவகுக்கிறது.
3. மதிப்பீடு
   'எட்மொடொ'வில் இருக்கும் வினாத் தொடுப்பு (quiz builder) அல்லது கருத்துக் கணிப்பு (poll feature) அம்சங்களைப் பயன்படுத்தி மாணவர்களை மதிப்பீடு செய்தல். மாணவர்களின் கற்றல் திறனையும் தன்னம்பிக்கையை வளர்த்திடவும் அதனை அளவிடவும் இது வழிவகுக்கின்றது.
4. நேரடி ஒலி/ஒளிப்பதிவுகள்
   ஒரு ஒளிக்காட்சியைப் பார்த்த பிறகு, அது குறித்த கருத்துகளை மாணவர்கள் நேரடியாக 'எட்மொடொ' தளத்திலேயே எழுதி பதிவு செய்யலாம். பதிவு செய்தவற்றை மீள்நோக்குவதற்கும் திருத்தி மீண்டும் பதிவேற்றம் செய்வதற்குமான வசதிகள் தளத்தில் இருக்கின்றன. இவை மாணவர்கள் தம் கற்றலுக்குப் பொறுப்பேற்கவும் செயல்திறனை மேம்படுத்தவும் வாய்ப்பளிக்கிறது.
5. திறனாய்வு
   மாணவர்களைச் சிறு குழுக்களில் அமர்த்தி தங்களுடைய இடுபணிகளைப் பதிவேற்றம் செய்து அதனைக் குறித்துச் சக மாணவர்களுடன் திறனாய்வையும் இருவழிக் கருத்துப் பரிமாற்றத்தையும் மேற்கொள்ளுதல். இதனால் ஒவ்வொரு மாணவனின் தகவல் உட்கிரகிக்கும் திறனுக்கேற்ப மாறுபட்ட புதிய சிந்தனைகள் அல்லது தங்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு காண இயலும் இது மாணவர்களின் சிந்தனையைத் தூண்டி ஆய்வு மனப்பான்மையை வளர்க்கிறது.
6. கட்டுரை எழுதுதல்
   மாணவர்கள் தனியாள் முறையில் கட்டுரைகளை எழுதி அதைப் பதிவேற்றம் செய்யலாம். இவர்களின் படைப்புகளைப் பிற மாணவர்களும் பார்த்துக் கருத்துரைக்கலாம். மாணவர்களின் எழுத்துத் திறனை வளர்ப்பதோடு சுயமாகக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பையும் ஏற்படுத்தித் தருகிறது.
7. சுய முனைப்புப் பணிகள்

சுய முனைப்புப் பணிகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கான வசதிகள் தளத்தில் இருக்கின்றன. இவற்றில் ஈடுபடுவதன் மூலம் 21-ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான திறன்களை வளர்க்க முடியும். இதில் மாணவர்கள் தாம் கேட்டவை, படித்தவை அல்லது பார்த்தவைப் பற்றிய கருத்துகளைப் பதிவு செய்யலாம். பிற மாணவர்களாலும் இந்தப் பகிர்வினைப் பார்க்க இயலும். மேலும் அக்கருத்துகளைக் குறித்துக் கருத்துரைக்கவும் முடியும். இது ஒரு தொடர் கருத்துப் பரிமாற்றத்தை உருவாக்கும்.

8. மொழி வளத்தைப் பெருக்குதல்

கருத்துப் பரிமாற்றம் வழி சரியான வாக்கியத்தையும் இலக்கண விதிகளையும் பயன்படுத்த ஊக்குவித்தல். மாணவர்களின் கருத்துப் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வாக்கியங்களை ஆய்வு செய்து பிழைகள் இருப்பின் அதனைத் திருத்த ஆசிரியர் பின்னூட்டு வழங்குதல்.

9. பணி வங்கி

ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேவைக்கும் திறனுக்கும் ஏற்ற பணிகளை உருவாக்கி சேமித்து வைக்கவும் பிறருடன் அவற்றைப் பகிர்ந்து கொள்ளவும் முடியும். இந்த வசதி ஆசிரியர்களுக்கிடையேயும் பள்ளிகளுக்கிடையேயும் பகிர்வுணர்வு வளர்க்க உதவுகிறது.

10. அறிவுக் களஞ்சியம்

மாணவர்கள் தாம் படித்த புத்தகத்தைக் குறித்துக் கருத்துகளைப் பதிவு செய்து/ எழுதி பிற மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் (Vesudevan, 2021)[7]. குறிப்பிட்ட ஒரு தலைப்பைப் பற்றிய கூடுதல் தகவலை அறிந்து கொள்ளும் வகையில் இணைப்புகளைப் பயன்படுத்தலாம்.

11. விவாத மேடை- பேச்சுத் திறனை வளப்படுத்துதல்

எழுத்து வாயிலாகக் கருத்துகளைத் தெரிவிக்கும் திறனை வளர்ப்பதோடு வாய்மொழியாகவும் தெரிவிக்க ஊக்குவித்தல். உதாரணத்திற்கு, ஏதாவதொரு தலைப்பினை வழங்கி அதைக் குறித்துத் தகவல்களைத் திரட்டப் பணித்துப் பின் தேடிய கருத்துகளைப் பதிவேற்றம் செய்தல்; ஆசிரியர் சரி பார்த்த பின் வகுப்பறையில் விவாதத்தை மேற்கொள்ளுதல்.

12. கல்வி வட்டத்தைப் பெருக்குதல்

பிற பள்ளி ஆசிரியர்களுடனும் மாணவர்களுடன் சமூகத் தொடர்பை ஏற்படுத்துதல், கருத்துப் பரிமாற்றத்தை நிகழ்த்துதல். இதனால், கல்வி அறிவு பெருகுவதோடு நண்பர்களின் வட்டத்தையும் பெருக்கிக் கொள்ளலாம்.

13. வாக்கெடுப்பு

இது தவிர்த்து, வாக்கெடுப்பு முறையும் ‘எட்மொடொவின்’ முக்கியக் கூறாகும். வினாக்களையோ அல்லது கருத்துகளையோ ஆசிரியர் தன் ‘POLL’ எனும் சுட்டியின் மூலம் எழுதி வாக்கெடுப்பு நடத்தலாம். இதன்வழி சொல்லப்படும் செய்திக்கு மாணவரின் ஆதரவும் எதிர்ப்பும் எவ்வளவு என்று கணித்திட ஆசிரியருக்கு எளிதாக இருக்கும். பாடத்தொடர்புள்ளதாய் மட்டுமல்லாமல் பொது அறிவு வடிவமாய்க் கூட இக்கேள்விகள் அமையலாம்.

**முடிவுரை**

இலக்கியம் மனிதனைப் பண்படுத்தும் ஊடகம் எனும் உண்மையின் அடிப்படையில் இன்றைய மலேசியக் கல்வித் திட்டத்தில் இலக்கியப் பனுவல்கள் முக்கிய அங்கமாகச் சேர்க்கப்பட்டாலும் முறையான அணுகுமுறையின் மூலமே அதன் நோக்கத்தை அடைந்திட முடியும் (Thannimalai, 2022)[8]. இன்றைய இருபத்தோறாம் நூற்றாண்டு மாணவர்களுக்கு விளைபயனைத் தரும் வகையில் தொழில்நுட்பம் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் முக்கிய இடம் பெற வேண்டும். எட்மோடோ தொழில்நுட்பத்தின் வாயிலாக ஆசிரியர்கள் தங்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதோடு நன்னெறிப் பண்புகளைக் கொண்ட சிறந்த மனித மூலதனத்தையும் உருவாக்க இயலும்.

## References


1. Jarc, J. (2010). Edmodo-a free, web2.0 classroom management tool. http://trendingeducation.com/?p=190, August 24, 2010.
2. Selwyn, (2009). Faceworking: Exploring Students' Education-Related Use of "Facebook". Learning Media and Technology, 34 (2) (2009), pp. 157-174
3. Thannimalai, T., & Ponniah, K.,& Nawastheen, F.M. (2020). Attitudes and skills of Tamil language teachers towards the use of ICT in teaching and facilitation. International Journal of Advanced and Applied Sciences 9(4), pp. 15-27
4. Pal Thamburaj, K., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [*A study on modern and traditional writing skill*]. Muallim Journal of Social Sciences and Humanities, 4(4), 141-146. https://doi.org/10.33306/mjssh/103
5. Kandappan Balasubramanian, V.,& Jaykumar & Leena Nitin Fukey. (2014). A Study on "*Student Preference towards the Use of Edmodo as a Learning Platform to Create Responsible Learning Environment*",Procedia - Social and Behavioral Sciences, Volume 144, 2014, Pages 416-422, ISSN 1877-0428, https://doi.org/10.1016/j.sbspro.2014.07.311.
6. Ponniah, K., & Jose, F.T., & Sivanadhan, I., & Nadarajan, P., & Akhmetova, A. (2022). Blended learning: A study on Tamil primary schools. International Journal of Advanced and Applied Sciences 9(3), pp. 172-177
7. Vesudevan, M. (2021). Teachers' perception about factors influencing ICT integration in teaching and learning and students' interest in lesson. Muallim Journal of Social Sciences and Humanities, 5(2), 28-40. https://doi.org/10.33306/mjssh/119
8. Thannimalai, T., & Ponniah, K., & Nawastheen, F.M., & Jose, F.T., & Jaiseelan, S. (2022). Attitudes and acceptance of information and communication technology (ICT) among urban and rural teachers in teaching and facilitation. International Journal of Advanced and Applied Sciences. 9(7), pp. 16-23